தமிழர் நினைவேந்தல் அகவம் – சுவிஸ்
Tamilar Remembrance Foundation - Swiss
Postfach 439, 4528 Zuchwil / www.trfswiss.com / trfswiss@gmail.com

# தமிழீழத் தேசிய மாவீரர் நினைவுப் பேச்சுப்போட்டி 2022

**11 வயதுப்பிரிவு**

(01.01.2011 – 31.12.2011 வரையில் பிறந்தோர்)

## இரண்டாம் லெப்டினன்ட் மாலதி

உடல் வலிமைக்கும் மன வலிமைக்கும் அறைகூவல் விடக்கூடிய பெரும் நெருப்பாறுகளைக் கடந்து 'எம்மால் முடியும்' என்று வரலாறு படைத்தவர்கள் தமிழீழப் பெண்கள். குமுகாயத் தளைகளுக்குள் கட்டுண்டு கிடந்த பெண்களைத் தலைவர் மாமாவின் வழிகாட்டல் தலைநிமிரச் செய்தது. நெஞ்சுரம் கொண்ட பெண் விடுதலைப் புலிகளாகத் தம்மை இணைத்துக் களமாட வைத்தது தமிழீழ விடுதலைப் போராட்டம்.

யாழ் கோப்பாய்ப் பகுதியிலே இந்திய இராணுவத்துடனான நேரடி மோதலில் முதல் பெண்மாவீரராகக் களப்பலியானார் மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த இரண்டாம் லெப்டினன்ட் மாலதி. ஆயிரத்துத் தொள்ளாயிரத்து எண்பத்தேழு ஒக்டோபர் பத்தாம் நாள் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட இவரின் முப்பத்தைந்தாவது நினைவு இவ்வாண்டு ஆகும். இவர் வீரச்சாவைத் தழுவிய நாளே தமிழீழப் பெண்கள் எழுச்சி நாளாகத் தமிழீழத் தேசியத்தலைவர் அவர்களால் அறிவிக்கப்பட்டது.

இவரைப் போன்று தமிழீழ விடுதலைக்காகக் களமாடி வீரச்சாவைத் தழுவிக்கொண்ட பல்லாயிரம் பெண் மாவீரர்களின் வீரவரலாறுகளைக் கொண்டுள்ளது எங்கள் தாய்மண். அவர்கள் தரையிலும் கடலிலும் வியத்தகு ஆற்றல்களைப் படைத்து வல்லமையின் வடிவங்களாகத் திகழ்கின்ற எங்கள் வழிகாட்டிகள்.

இவர்கள் சமர்க் களங்களில் மட்டுமல்லாது, அனைத்துக் கட்டமைப்புகளிலும் துறைகளிலும் தனித்தன்மையுடன் தங்களை நிலைநிறுத்திக் கொண்டார்கள். இவர்களில் பலர் தாய், சேய் உறவின் உன்னதங்களை விட, தமிழீழ விடுதலையே உயர்வென்று களமாடி மாவீரரான பெருமை கொண்டவர்கள்.

"விழிப்படைந்து எழுச்சி கொள்ளும் பெண்ணினமே ஒரு போராட்ட சக்தியாக உருப்பெற முடியும்" என்ற தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களின் சிந்தனைக்குச் செயல்வடிவம் கொடுத்து, மாபெரும் அர்ப்பணிப்புகளைப் புரிந்து, தமிழீழ விடுதலைக்காகத் தம்மைத் தந்தார்கள் பெண் மாவீரர்கள். அவர்களின் இலட்சியக் கனவாம் தமிழீழ மண்ணின் விடுதலைக்காகவும் பெண்விடுதலைக்காகவும் நாமும் உழைப்போம்.

நன்றி,
வணக்கம்.